
ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ:

ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் சரணம்

ஸ்ரீ மகா பெரியவா சரணம்





# ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் பிம்ப பிரதிஷ்டை மற்றும் மணிமண்டப கும்பாபிஷேக பத்திரிக்கை

ஸ்வாமிகள் பிறந்த ஊரான வழூர் கிராமம், வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்

**ஸ்வஸ்தி ஸ்ரீ பிலவ வருடம், பங்குனி மாதம் 23 ம் தேதி புதன்கிழமை பஞ்சமி ரோஹிணி நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் 06-04-2022 அன்று காலை 9 மணி முதல் 10.00 மணிக்குள் ரிஷப லக்னத்தில்**

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பொற்கரங்களால், மடாதிபதிகள், ஆதீன கர்தாக்கள் முன்னிலையில், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் பிம்ப பிரதிஷ்டை மற்றும் மணிமண்டப கும்பாபிஷேகம் வெகு வெகு விமரிசையாக, வரலாறு காணாத அளவில், கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் படி நடைபெற இருக்கிறது.

*கருணா சாகரம் சாந்தம் அருணாசல வாஸிநம்|*

*ஸ்ரீ சேஷாத்ரி குரும் வந்தே பிரம்ஹி பூதம் தபோநிதிம்||"*







**பேரன்புடையீர்,**

நினைத்தாலே முக்தி தரும் அண்ணாமலையில் தான் என்ற முனைப்பை ஒழித்து, பரப்பிரம்மத்தின் சொரூபம் தேடி, பிறவியின் பயனை அடைய,அந்த மலையில் பிரகாசிக்கும் ஞான ஜோதியில் கலக்க வந்த எண்ணற்ற மஹான்களில் முக்கியமான மஹான் நமது **ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளும்** ஆவார்.

ஆதி சங்கரர் சித்தப்படி காஞ்சி காமாட்சியை உபாசிக்க நர்மதை நதி தீரத்திலிருந்து காஞ்சிக்கு வந்த 30 குடும்பங்களில் ஒன்றில் காமகோடி வம்சத்தைச் சேர்ந்த பரம்பரையில் உதித்த ஒரு அருள் ஒளிதான் மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்.

**மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 1870ம் வருடம் தை மாதம் 11 ம் நாள், சனிக்கிழமை, ஹஸ்த நட்சத்திரத்தில் (Jan 22$^{nd}$),** காமாட்சியின் அருளால், ஸ்ரீமதி மரகதம்மாள், வரதராஜன் தம்பதிக்கு, வந்தவாசிக்கு அருகில் உள்ள வழூர் என்னும் கிராமத்தில் அவதரித்தார்.

## வழூர் கிராமம்:

மேற்சொன்னபடி நர்மதை தீரத்தில் இருந்து காஞ்சிக்கு வந்த 30 குடும்பங்களுக்கும் காமகோடி வம்சம் என்று பெயர், அந்த குடும்பங்கள் காஞ்சிபுரத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் வசித்தனர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெரிய மஹானான காமகோடி சாஸ்த்ரிகள் மற்றும் அவர் தமையனார் சிதம்பரம் சாஸ்த்ரிகள் காஞ்சிக்கு அருகில் உள்ள வழூரில் வசித்தனர்.





காமகோடி சாஸ்த்ரியாருக்கு ஒரே ஒரு பெண் குழந்தை என்பதால், தன் சகோதரர் சிதம்பர சாஸ்திரியின் குழந்தைகள் நால்வரையும், தன் குழந்தைகள் போல பாவித்து வளர்த்து வந்தார். அதில் ஒரு பெண் தான் மரகதம்மாள். மரகதம்மாளைத் தன் பெண் போலவே வளர்த்த தன் பெரியப்பாவை, தன் தந்தைபோல அவரும் பாவித்தார்.

வழூர் தபோவனம் போல் உள்ள ஓர் அழகிய கிராமம். கோடையிலும் வற்றாத ஒரு குளக்கரையை ஒட்டி மிக மிக அழகாக ஸ்ரீ சுந்தரவதனப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. அதன் அருகில்தான் காமகோடி சாஸ்திரிகளின் வீடு அமைத்திருந்தது. இன்றும் கோயில் அருகே உள்ள குளத்தின் படித்துறைக்கு காமகோடி படித்துறை என்று தான் திருநாமம்.

## மரகதம்மாளின் திருமணம்:

ஸ்ரீ காமகோடி சாஸ்திரிகளின் மாணாக்கனான காஞ்சியை சேர்ந்த வரதராஜரை மரகதம்மாளுக்கு மணம் முடித்தனர். மரகதம்மாளுக்கு வெகுகாலமாக குழந்தை பாக்கியம் இல்லாததால், குடும்பமே மனமுருக காமாட்சியை வேண்டியதால்,அன்னை காமாட்சி ஸ்ரீ காமகோடி சாஸ்த்ரியார் கனவில் தோன்றி, "**நவநீதம் கொடு, ஞானக்கலை உதிக்கும்** "என்று சொல்ல, அவரும் அப்படியே செய்ய, மரகதம்மாளுக்கு ஒரு அழகிய ஆண் மகவு பிறந்தது. சுந்தரவதனப் பெருமாளை வேண்டிப் பிறந்ததாலும், குலதெய்வமான வெங்கடாசலபதியையும் நினைத்து, சேஷாத்ரி என்று பெயர் சூட்டினர். பிறகு மரகதம்மாளுக்கு, நரசிம்மன் என்ற மற்றொரு ஆண் குழந்தை பிறந்தது.

## தங்கக்கை சேஷாத்ரி:

மரகதம்மாள் ஒருமுறை நான்கு வயதான சேஷாத்ரி ஸ்வாமிகளை வரதராஜ பெருமாள் வைகாசி பிரம்மோத்ஸவத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போது கோவில் வாசலில் உள்ள கடையில் கிருஷ்ண விக்கிரஹத்தை வாங்கித் தர ஸ்வாமிகள் அடம்பிடித்தார். மரகதம்மாளோ அதை மறுக்க, அதைக் கண்ணுற்ற கடைக்காரர், ஒரு விக்கிரஹத்தை குழந்தையிடம் இனாமாகக் கொடுத்தார்.

**கிருஷ்ண விக்கிரஹம்**



**அதன்பின் ஒரு அதிசயம் நிகழ்ந்தது, வியாபாரியின் கடையில் உள்ள அத்தனை விக்கிரஹங்களும் ஒரே நாளில் விற்றுவிட்டது. அடுத்த நாள், மரகதம்மாள், கோவிலுக்கு ஸ்வாமிகளை அழைத்துச் செல்லும் பொழுது வியாபாரி மரகதம்மாளிடம், " உங்கள் மகனின் கை, தங்கக்கை, தங்கக்கை என்று கூறி, 10 நாட்களில் விற்கும் பொம்மை ஒரே நாளில் விற்றுவிட்டது " என்று மகிழ்ச்சியுடன் கூற, அன்றுமுதல் ஸ்வாமிகள், "தங்கக்கை சேஷாத்ரி " ஆனார்.**

## தந்தையின் மறைவு:

ஸ்வாமிகளின் தந்தையான வரதராஜர் உடல்நிலை காரணமாக இயற்கை எய்தினார். கணவனைப் பிரிந்த துக்கத்தால் மரகதம்மாள் மிகவும் சிரமப்பட, காமகோடி சாஸ்த்ரியார் மரகதத்தையும்,குழந்தைகளையும், காஞ்சியிலிருந்து வழூருக்கு, ஸ்வாமிகளின் 14 வயதில் அழைத்துச் சென்றார்.

## மகானின் வழூர் வாசம்:

தனது 14வயதில் வழூர் வந்த ஸ்வாமிகள், காமகோடி சாஸ்த்ரிகளிடம் பல விஷயங்களைக் கற்றுத் தேர்ந்தார். காமகோடி சாஸ்த்ரிகள், **"அம்பே சிவா"** போன்ற பல கீர்த்தனைகளையும் இயற்றியவர். வழூரில் ஸ்வாமிகள் இருந்த 4 வருடங்களில் வந்தவாசியில் தாசில்தாராக பணிபுரிந்த திரு.வெங்கட சுப்பையர் வேண்டுகோளின்படி, இராமாயணம்,இதிஹாஸ உபன்யாஸங்கள் செய்து வந்தார்.

ஸ்ரீசுந்தரவதனப் பெருமாள்



காமகோடி குளம்



ஸ்வாமிகளின் திறமையைக் கண்டு அனைவரும் வியந்தனர். ஸ்வாமிகள் வழூரில் இருந்த காலத்தில், அருகிலுள்ள பிரம்மபுரீஸ்வரர் கோவில், பெருமாள் கோவில், காமகோடி குளம், வழூர் அருகில் உள்ள கோடீஸ்வரர் அதிஷ்டானத்தில் இருந்து கொண்டு நிஷ்டையில் இருப்பார். வழூரில் ஸ்வாமிகளின் கால் படாத இடமே இல்லை.

## மீண்டும் காஞ்சிபுர விஜயம்:

தாத்தா காமகோடி சாஸ்த்ரிகளின் உடல்நிலை மிகவும் மோசமாகவே மீண்டும் ஸ்வாமிகளின் 17 வது வயதில் அனைவரும் காஞ்சிபுரம் திரும்பினர். காமகோடி சாஸ்த்ரிகள் துறவு பூண்டு, காஞ்சிக்கு அருகில் உள்ள தாமலில் சித்தியானார். ஸ்வாமிகளுக்கு மணமுடிக்க வயது ஆனதால், மரகதம்மாள் ஸ்வாமிகளுக்கு மணம் முடிக்க தனது மைத்துனர் ராமஸ்வாமி ஜோசியரிடத்தில் ஜாதகத்தைக் காண்பிக்க, ஜோசியர் அதைப்பார்த்து, ஸ்வாமிகளுக்குத் திருமண பாக்கியம் இல்லை என்று சொல்ல, மரகதம்மாள் செய்வதறியாது திகைத்துக் கவலை அடைய, மரகதம்மாளுக்கு உடம்பு முடியாமல் மிக மோசமானது.

ஒருநாள், மரகதம்மாள் ஸ்வாமிகளை அழைத்து,

*"ஸத்ஸங்கத்வே நிஸ்சங்கத்வம், நிஸ்சங்கத்வே நிர்மோஹத்வம்|*

*நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம், நிஸ்சலதவ்வே ஜீவன்முக்தி|| "*

என்று சொல்லி, "அருணாசலம், அருணாசலம், அருணாசலம்" என்று மூன்று முறை கூறி ஸ்வாமிகளின் மேல் சாய்ந்து உயிர்விட்டார்.

தாயின் மறைவுக்கு பிறகு ஸ்வாமிகளின் தபசும், வைராக்கியமும், திருவண்ணாமலையை பற்றிய நினைவும் அதிகமானது. ஸ்வாமிகள் திருவண்ணாமலையைக் கண்டது இல்லை என்றாலும், திருவண்ணாமலைப் போன்றே ஒரு படம் வரைந்து அதைப் பூஜை செய்து வந்தார்.

வீட்டிற்குள் எந்த நேரமும் ஜபம் மற்றும் தியானத்தில் சாப்பிடாமல் ஈடுபட ஆரம்பித்தார். அது மாத்திரம் இல்லாது வரதராஜர் கோவில் சக்கரத்தாழ்வார் சன்னதி, காமாட்சி அம்மன் கோவில் சன்னதி, காஞ்சி மடத்திற்கு எதிரே உள்ள கங்கை கொண்டான் மண்டப ஆஞ்சேநேயர் கோவில், சர்வதீர்த்தகரை, மற்றும் மயானம் போன்ற இடங்களிலும் நேரம் போவதே தெரியாமல் ஜபம் செய்வார்.

பித்தன் மாதிரி வீதிகளை வலம் வருவார். ஸ்வாமிகளின் சித்தப்பா, மற்றும் பல பெரியவர்கள் மயான ஜபம் தவறு என்றும், அப்படி செய்தால் வீட்டிற்கு வரவேண்டாம் என்று கடுமையாகக் கோபிக்க, வீட்டிற்குச் செல்வதைத் தவிர்த்துக் கோவிலிலேயே தங்க ஆரம்பித்தார்.அன்ன ஆஹாரமின்றி பரதேசி போல வாழ ஆரம்பித்தார். இதைக் காணச் சகியாமல், சித்தி கல்யாணி அவரை மீண்டும் வீட்டிற்கே அழைத்து வந்தார்.

## துறவறம், மற்றும் பூட்டிய அறையிலிருந்து மாயம்:

காஞ்சிபுரத்தில் உள்ள சர்வதீர்த்தக்கரையில் உள்ள காசி விஸ்வநாத ஆலயத்தில் வட நாட்டிலிருந்து வந்து தங்கியிருந்த பாலாஜி ஸ்வாமிகளிடம் சன்யாச தீட்சை வாங்கிக்கொண்டு அதுமுதல் வீட்டிற்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டார். ஒருநாள் ஸ்வாமிகளின் அப்பாவின் சிரார்த்தம் வந்தது. ஸ்வாமிகளைத் தேடி அழைத்து வந்து சிரார்த்தத்தில் கலந்து கொள்ள வேண்டினர். ஸ்வாமிகள், தான் சன்னியாசி, தனக்கு இதெல்லாம் கிடையாது என்று கூற, சித்தப்பாவிற்குக் கோபம் வந்து, ஸ்வாமிகளை முன் அறையில் வைத்துப் பூட்டி விட்டனர்.

சிரார்த்தம் முடிந்தவுடன், ஸ்வாமிகளை அழைத்து, போஜனம் போட திறந்த போது ஸ்வாமிகள் பூட்டிய அறையிலிந்து மாயமாக மறைந்து விட்டிருந்தார். அப்பொழுது அவருக்கு வயது 19. அப்பொழுது வீட்டை விட்டு வெறியேறிய ஸ்வாமிகள், திருவண்ணாமலை சென்று அடைந்தார். அப்பொழுதுதான் அவர் பெரிய ப்ரம்மஞானி என்று ஊருக்குத் தெரிந்தது.

வழியில் காவேரிப்பாக்கம் சிவன் கோவிலை அடைந்தார். பின் அங்கிருந்து மறைந்து திண்டிவனம் சிவன்கோயிலில் யாக சாலையில் தபஸ் மேற்கொண்டார். பின் வந்தவாசி வழியாக தூசி,மாமண்டுர் சென்று பின் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரை அடைந்தார். பின் அங்கிருந்து கிளம்பி படைவீடு, துரிஞ்சக்குப்பம் வழியாக தான் விரும்பிய திருவண்ணாமலையை அடைந்தார்.

## நித்ய திருவண்ணாமலை வாசம்:


அழுக்கு உடையில், பித்தன் போல எப்பொழுதும் திருவண்ணாமலையைச் சுற்றி வருவார். எப்பொழுது குளிப்பார், என்ன சாப்பிடுவார் என்றே தெரியாது. சில நாட்கள், திருவண்ணாமலை சிவகங்கை தீர்த்தத்தில் நிறைய நேரம் மூழ்கி எழுவார், லட்சம் தடவைக்கு மேல் கிரிவலம் செய்திருக்கிறார்.





அருணாச்சலேஸ்வரர் கோயிலில் உள்ள கம்பத்து இளையனார் சன்னதியில், பச்சைவாழி அம்மன் கோவில், சின்ன குருக்கள் வீட்டுத் திண்ணை, அன்ன சத்திரம், சாது சத்திரம், மற்றும் கிரிவலப் பாதையிலும் ஸ்வாமிகள் தபஸ் செய்வார். எப்பொழுது தூங்குவார், சாப்பிடுவார் என்று தெரியாது.

பகவான் ரமணரை திருவண்ணாமலை கோவிலில் உள்ள பாதாள லிங்க குகையிலிருந்து வெளி உலகத்திற்குக் கொண்டு வந்தவர் நமது ஸ்வாமிகள். 1896ல், திருவண்ணாமலை வந்து, “நான் யார்” என்ற கேள்வியுடன் கடும் தவம் புரிந்தவர், ஸ்ரீரமண மஹரிஷி.



அவர் திருவண்ணாமலை பாதாள லிங்க குகையில், கடுமையாக தபஸ் செய்யும் பொழுது, புழு பூச்சிகள் அவரைக் கடித்துத் துன்புறுத்தின. அந்த நேரத்தில் அவரை வெளிக்கொணர்ந்து உலகிற்கு ரமணரை அறிமுகம் செய்தார் ஸ்வாமிகள். தான் அம்பாளாகவும், ஸ்ரீரமணரை முருகப் பெருமானாகவும் காண்பித்துக் கொடுத்தவர்.

**பல அற்புதங்களை நிகழ்த்திய மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 1929ம் வருடம் ஜனவரி 4 ம் தேதி திருவண்ணாமலையில் சித்தி அடைந்தார்.**

## ஸ்வாமிகள் நிகழ்த்திய அற்புதங்களில் சில துளிகள்:

**திருவண்ணாமலையில் ஒரு கல்யாண நிகழ்ச்சிக்கு வேண்டா விருந்தாளியாகச் சென்று, அங்கு செய்து வைத்த சாம்பாரைக் கொட்டி, எல்லோரிடமும் திட்டு வாங்கி,பின் பார்த்தால், அந்தப் பாத்திரத்தில் பாம்பு ஒன்று செத்துக்கிடந்தது. எல்லோர் உயிரையும் காப்பாற்றியதை அறிந்து,ஸ்வாமிகளை விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டனர்.**

**திருவண்ணாமலை குளத்தில் குளிக்கும் போது, தண்ணீரைப் பக்கத்தில் இருப்பவர் மேலே துப்புவார். தண்ணீர் பட்டவர்கள் உடம்பில் உள்ள வியாதிகள் குணமாகிவிடும்.**

**சிறு வயதிலேயே வழூரில் வெகு நேரமாகியும் ஸ்வாமிகளைக் காணாமல் மரகதம்மாள் எங்கும் தேட, மாலை பொழுது மறையும் வேளையில், காமகோடி குளத்திலிருந்து வெளியே வந்து, 'நான் கிருஷ்ணனுடன் விளையாடினேன்" என்று கூறுவார்.**


**வழூரில் ஸ்வாமிகள் வாசம் செய்யும் போது அந்த ஊருக்கு அருகிலுள்ள பெரிய மஹானான கோடீஸ்வரர் ஜீவ சமாதியில் தபஸ் செய்வது வழக்கம். ஒரு நாள், ஒரு நாகம், ஸ்வாமியின் தலையில் படமெடுத்து ஆட, அருகில் இருந்த பக்தர்கள் எல்லோரும் பயந்து நிற்க,பின்பு நாகம் ஸ்வாமிகள் தலையிலிருந்து இறங்கி, ஸ்வாமியை நமஸ்கரித்து மறைந்தது, கண்கொள்ளாக் காட்சி.**


வழூரில் உள்ள முக்கியக் கோவிலான, ஸ்ரீகாமரசவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ ப்ரம்மபுரீஸ்வரர் ஆலயத்தில், இவர் ஜபம் செய்து கொண்டிருந்த போது, இவர் இருப்பது அறியாமல், கதவை மூடிவிட்டார்கள். மாலை திறக்கும்போது, ஸ்வாமி, சன்னதியில் சிவனாகவே காட்சி அளித்தார்கள்.

திருவண்ணாமலையில் பக்தர்களுடன் இருக்கும் பொழுது, வானத்தைக் காண்பித்து,"இதோ விட்டோபா போகிறான்", என்று எல்லோருக்கும் காண்பித்துக் குதித்தாராம்.

## ஸ்வாமிகளைப் பற்றி மஹாபெரியவா:








காஞ்சி காமகோடி பீடம் 68வது பீடாதிபதியான, ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி என்னும் மஹாபெரியவாளுடைய தவ வலிமையை நாம் அனைவரும் அறிவோம். மறைந்த எழுத்தாளர், பரணீதரன், காஞ்சிபுரத்தில் மஹான் வாழ்ந்த வீட்டை, மஹாபெரியவரின் ஆலோசணைப்படி வாங்கி, "ஸ்ரீ சேஷாத்ரி நிவாஸம்" என்று பெயரிட்டு, அதை கட்டி முடித்தார்.










அந்த வீட்டில் வைப்பதற்காக மஹானின் பெரிய போட்டோவை, பெரியவா முன்னால் வைத்து, ஆசீர்வதிக்க வேண்டினார். அந்த போட்டோவைப் பார்த்த பெரியவா, சேஷாத்திரி ஸ்வாமிகள் பெரிய மகான், அம்பாளுடன் ஐக்கியமானவர் என்று சொல்லி "**இந்த மாதிரி தானே மஹான் உட்கார்ந்து இருக்கிறார்**", என்று மஹான் போலவே காலை மடித்து வைத்து, இடக்கையை கன்னத்தில் வைத்து, இப்படிச் சொன்னார். "டேய்! நான் சேஷாத்ரி ஸ்வாமிகள் போல ஆவேனா? அந்த நிலை எனக்குச் சித்திக்குமா?" என்றார். பெரிய ஞானியான மஹாபெரியவாளின் இந்த வாக்கியத்திலிருந்தே மஹானின் பெருமையை நாமெல்லாம் உணரலாம்.

## வழூரில் மணிமண்டபம்:

மஹான் தன் வாழ்நாளில் அதிகமாக இருந்தது மூன்று ஊர்களில்தான். ஒன்று, தான் பிறந்த வழூரில் - 4 வருடம், தான் வளர்ந்த காஞ்சிபுரத்தில் - 15 வருடமும், இறுதியாக தான் சித்தி அடைந்த அருணாசலத்தில் - 40 வருடமும் வாழ்ந்தார்.

**காஞ்சிபுரம்–15 வருடம்**



**அருணாசலம்-40 வருடம்**




**வழூரில் - 4 வருடம்**



மகான் வாழ்ந்த காஞ்சிபுரத்தில் அவரின் வீடும், அருணாசலத்தில் அதிஷ்டானமும் உள்ளன. ஆனால், மஹான் பிறந்த ஊரான வழூரிலோ

எந்தவொரு நினைவுச்சின்னமும் இல்லை. **இந்த மணிமண்டப திருப்பணி மூலம் அந்த கனவும் நிறைவேறுகிறது.**

1970 வாக்கில் அருணாச்சல மஹிமை என்ற தொடர் கட்டுரையை எழுதி வந்த மறைந்த எழுத்தாளர் பரணீதரன் அவர்கள், ஸ்வாமிகள் பிறந்த ஊரான வழூருக்கு விஜயம் செய்து, ஸ்வாமிகளின் மூதாதையர்கள் வாழ்ந்த இடத்தையும், பாழடைந்த நிலையில் இருந்த பெருமாள் கோவிலையும், குளத்தையும், படம் பிடித்து, கட்டுரையில் இடம் பெறச் செய்தார்.

காஞ்சி காமகோடி 69வது பீடாதிபதியான **பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள்** 2001ம் ஆண்டு வழூருக்கு விஜயம் செய்து,



அங்குள்ள சிவன் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு சுந்தரவதன பெருமாளையும் தரிசித்து, ஜன்ம ஸ்தானத்தை தரிசனம் செய்து மகிழ்ந்தார்கள்.

## திருப்பணியில் நடந்த அதிசயங்கள்:

**ஸ்வாமிகளின் மூதாதையர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தாங்கள் வழூரில் வாழ்ந்து வந்த இடத்தை விற்று விட்டார்கள். ஸ்வாமிகளின் பிறந்த ஊரில் மணிமண்டபம் கட்டுவதென 2009 ஆண்டே முடிவு செய்து, ஒரு ட்ரஸ்ட் உருவாக்கி, அங்கு குடியிருந்த 8 குடும்பங்களுக்கு வேறு இடம் ஏற்பாடு செய்து, வீடு கட்டி, அவர்களைக் குடி அமர்த்த 8 வருடகாலம் ஆயிற்று. 2018 ம் ஆண்டு திருப்பணி தாமதமாகிறதென்று, மஹாபெரியவாளின் ப்ருந்தாவனத்தில் அன்பர்கள் வேண்டினர்.**

**வேண்டிக்கொண்ட சில நாட்களிலேயே, மஹாபெரியவா, New Hampshire, USAல் வசிக்கும், மஹாபெரியவாளின் பக்தரான மஹா பாக்கியசாலியான, ஸ்ரீ.வீரமணி கனவில் சென்று, "வழூர் "வழூர் ஸ்வாமிகளுக்கு உதவி செய்", "சேஷாத்ரி ஸ்வாமிகளுக்கு உதவி செய்" என்று மூன்று முறை கனவில் சொல்ல, அதற்கு "பண உதவி செய்ய வேண்டுமா, பெரியவா" என்று வீரமணி கேட்க, அதற்கு இல்லை என்று பதில் வந்தது. அவரும் கண்விழித்து, சேஷாத்ரி ஸ்வாமிகளைப்பற்றி அறிய, இந்தியா வந்து, அதிஷ்டானத்தில் வேண்ட, ஒருவர் தானாகவே வந்து வழிசொல்ல வழூரைச் சென்றடைந்து, அந்த ஜென்ம ஸ்தானத்தை பார்த்து நெக்குருகி, கண்ணீர் மல்கி, திருப்பணியில் ஈடுபட்டிருந்த திரு.ரவி, திரு. ஸ்ரீதர், திருமதி. மஹாலஷ்மியைத் தொடர்புகொண்டு, நேரில் சந்தித்து திருப்பணிகளை தொடர வேண்டினார். அதன்பின் ப்ரமாண்ட அளவில் June 2019ம் ஆண்டு தொடங்கி, இப்பொழுது கும்பாபிஷேகம் நடக்க உள்ளது.**

# ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மணிமண்டப திருப்பணி

## சில காட்சிகள்






27.07.2019 09:41


01.09.2021 11:15




01.09.2021 10:07


11.02.2012 19:10


24.08.2020 11:10





இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த மஹானின் பிம்ப பிரதிஷ்டை மற்றும் மணிமண்டப கும்பாபிஷேகமானது, ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராசார்ய ஸ்வாமிகள் பூஜ்ய ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், பூஜ்யஸ்ரீ ஜெயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள், மற்றும் பூஜயஸ்ரீ சங்கர விஜயேந்த்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆசியோடு கோபாலபுரம் மணிமாமா அவர்களின் ஆலோசனையின் படியும்

**ஸ்வஸ்தி ஸ்ரீ பிலவ வருடம், பங்குனி மாதம் 23 ம் தேதி புதன்கிழமை பஞ்சமி ரோஹிணி நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் 06-04-2022 அன்று காலை 9 மணி முதல் 10.00 மணிக்குள் ரிஷப லக்னத்தில்**

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பொற்கரங்களால், மடாதிபதிகள், ஆதீன கர்தாக்கள் முன்னிலையில், வெகு வெகு விமரிசையாக, வரலாறு காணாத அளவில், கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் படி நடைபெற உள்ளதால், பக்தர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு மகானின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டுகிறோம்.

இப்படிக்கு

| சர்வ சாதகம் | கிராம மக்கள் வழூர் |
|---|---|
| கும்பாபிஷேக சாம்ராட் ஸ்ரீவித்யா உபாசகர் ஸ்ரீ தினகர சர்மா அவர்கள் | ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி சுப்பிரமணியம் மற்றும் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் (வழூர்) ட்ரஸ்ட் உறுப்பினர்கள் |

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| **03/April/2022**<br>**பங்குனி மாதம் 20ம் தேதி**<br>**ஞாயிற்றுக்கிழமை** | **காலை – 7.00 am மணிக்கு:**<br>மங்கள இசை<br>பூர்வாங்கம், அனுக்ஞை, கணபதி பூஜை, எஜமான் சங்கல்பம், ம்ருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்.<br><br>**11.30 am மணியளவில்:**<br>தீபாராதனை, பிரஸாதம் வினியோகம்.<br>------------------------------------------------------------------<br>**5.00 pm மணிக்கு:**<br>வாஸ்து ஹோமம், யாகசாலா ப்ரவேசம்<br>முதல் கால பூஜை, ஜபம் .<br><br>**இரவு 8.30 மணிக்கு:**<br>பூர்ணாஹூதி, வேத சமர்ப்பணம் |
| **04/April/2022**<br>**பங்குனி மாதம் 21ம் தேதி**<br>**திங்கள்கிழமை** | **காலை 7.30 am மணிக்கு:**<br>மங்கள இசை<br>இரண்டாம் கால யாக பூஜை துவக்கம்<br>மூல மந்திர ஜபம், ஹோமம், சகஸ்ரார்சனை<br><br>**11.30 am மணிக்கு:**<br>பூர்ணாஹூதி, தீபாராதனை<br>பிரஸாத விநியோகம்<br>------------------------------------------------------------------<br>**5.00 pm மணிக்கு:**<br>3ம் கால யாக பூஜை, மூலமந்திர ஜபம் ஹோமம்<br>தத்வ ஹோமம், கலா ஹோமம்<br><br>**8.30 மணிக்கு:**<br>பூர்ணாஹூதி, தீபாராதனை |
| **05/April/2022**<br>**பங்குனி மாதம் 22ம் தேதி**<br>**செவ்வாய்க்கிழமை** | **காலை 7.30 am மணிக்கு:**<br>மங்கள இசை<br>4வது கால பூஜை, மூல மந்திர ஜபம், ஹோமம்<br><br>**11.30am மணிக்கு:**<br>பூர்ணாஹூதி தீபாராதனை, வேத சமர்ப்பணம்<br>பிரசாத விநியோகம்<br>------------------------------------------------------------------<br>**5.00 pm மணிக்கு:**<br>5வது கால பூஜை, மூல மந்திர ஜபம் ஹோமம்<br><br>**8.30pm மணிக்கு:** பூர்ணாஹூதி, வேத சமர்ப்பணம்<br>பிரஸாத விநியோகம் |

| | |
|---|---|
| **06/April/2022**<br>**பங்குனி மாதம் 23ம் தேதி**<br>**புதன்கிழமை** | **காலை 6.00 மணிக்கு:**<br>மங்கள இசை<br>ஆறாவது கால பூஜை, ஜபம் ஹோமம்<br><br>**8.00 am மணிக்கு:** வஸோர்த்தாரை ஹோமம், நாடி சந்தானம், ஸ்பர்ஸாஹூதி<br>மஹா பூர்ணாஹூதி, கடம் புறப்பாடு<br><br>**9.00 am மணிக்கு:**<br>சுந்தர விநாயகர் கும்பாபிஷேகம்,<br>விமான அபிஷேகமும் உடன் பிம்ப அபிஷேகமும் நடைபெறும். தொடர்ந்து ஸ்வாமி திரு வீதியுலா புறபாடு மற்றும் அன்னதானம் நடைபெறும்.<br>**ஸ்வஸ்தி ஸ்ரீ பிலவ வருடம், பங்குனி மாதம் 23 ம் தேதி புதன்கிழமை பஞ்சமி ரோஹிணி நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் 06-04-2022 அன்று காலை 9 மணி முதல் 10.00 மணிக்குள் ரிஷப லக்னத்தில்**<br>**பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பொற்கரங்களால், மடாதிபதிகள், ஆதீன கர்தாக்கள் முன்னிலையில், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மணிமண்டப பிம்ப பிரதிஷ்டை மற்றும் கும்பாபிஷேகம் நடைபெறும்.** |



## திருப்பணியில் பெரும் பங்கேற்ற பாக்யவான்கள்:

திரு.பாபா கல்யாணி (Chairman - Kalyani Group of Companies), Pune
திரு.Dr. M.வெங்கட்ராமன், Pune
திரு. சுரேஷ் - (Arun Excello Group of Companies), Chennai
திரு. பொன். மணிவண்ணன், Chennai
திரு. கணேஷ் கோபால், USA
திரு. ரவிச்சந்திரன், Bengaluru
திரு. கிரி ப்ரசாத் - Rane Group, Chennai
திரு. நந்தகுமார், Boston, USA
திரு. ரத்னப்ரசாத்,Trichy
திரு. Dr. ஹுசைன், Chennai
திரு. தட்சிணாமூர்த்தி அருணாச்சலம், Gujarat
திரு. வெங்கடேஷ், SVE Energy Pvt Ltd, Chennai

இத்திருப்பணிக்காகத் தனது வாழ்க்கையையே தியாகம்செய்த இரண்டு அற்புத மனிதர்கள் திரு. ரவியின் தந்தையான திரு.R.சுப்ரமணியம் அவர்கள் மற்றும் திரு.பக்தவத்சல ரெட்டியார் அவர்கள்.

வழூரைச் சேர்ந்த திரு.Dr. ஸ்ரீதர் அவர்கள் சுந்தரவதன பெருமாள் கோயில், கும்பாபிஷேகத்திலும், மற்றும் நமது மகானின் மணிமண்டபத் திருப்பணியிலும் இரவு பகல் பார்க்காது திரு. பக்தவத்சல ரெட்டியாருடனும் பின்பு அவருடைய மகன் திரு.பாஸ்கரோடும் இணைந்து இன்றும் பாடுபட்டு வருகிறார்.

இந்த திருப்பணியில் தன்னை முழு நேரமாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் திருமதி.மஹாலக்ஷ்மி சுப்ரமணியன் மற்றும் திரு.ஆடிட்டர் ரவி அவர்கள்.

திரு. மோகன் அவர்கள், எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் திருப்பணியை மணிமண்டப ஸ்தபதியான நந்தகுமாருடன் சேர்ந்து அற்புதமாக்கியவர். 10 வருடங்களுக்கும் மேலாக இடைவிடாது காஞ்சிபுரத்திலிருத்து வழூருக்குச் சென்று ப்ரதிமாத ஹஸ்த பூஜையை தவறாமல் நடத்தி வரும் திரு.Dr.சுப்ரமணியம் மற்றும் திரு. ஆறுமுகம் போன்றோர், இந்தத் திருப்பணியில் பெரும் பங்கு அளித்தவர்கள்.

வழூரைச் சேர்ந்த புலவர் திரு.வாசுதேவன் அவர்கள்தான் முதன்முதலில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்மையாரை தொடர்பு கொண்டு அந்த ஊரின் திருக்கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டுகோள் விடுத்தவர். அதுமட்டுமின்றி வழூர் கிராம மக்கள் அனைவரும் மற்றும் கிராம தலைவர் செல்வி தனசேகர் அவர்களும் இந்த திருப்பணிக்கு பெரும் உதவி புரிந்து வருகின்றனர்.

வழூரில் மணிமண்டபம் அமைவதில் திருவண்ணாமலை அன்றைய மாவட்ட ஆட்சியர் திரு.இராஜேந்திரன் அவர்களின் பங்கு மிகவும் போற்றுதலுக்குரியதாகும்.

திரு.பட்டாபிராமன் அவர்கள் மகானின் மணிமண்டப திருப்பணியிலும், நித்திய பூஜை கைங்கரியத்திலும் மற்றும் பல விதத்திலும் உதவி புரிந்து வருகிறார்.

திரு.வளசை ஜெயராமன் அவர்கள் எங்களுடன் இணைந்து உதவி புரிவதுடன், கும்பாபிஷேக விழா மலரின் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

# சிறப்பு நாதஸ்வர கலைஞர்கள்

**திருவண்ணாமலை**
**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான நாதஸ்வர வித்வான்கள்**
**கலைமாமணி Dr.K.S.செந்தில் முருகன்**
**கலைமாமணி Dr.S.சாந்தி செந்தில் முருகன் குழுவினர்கள்**

**நாதஸ்வர கலைச்செல்வன் இலுபப்பட்டு. இ. எஸ். எஸ்.அரவிந்த்**
**நாதஸ்வர கலைச்செல்வன் சிதம்பரம் வி.எஸ்.ஐயப்பன்**
**தவில் இசை மாமுரசு இலுபப்பட்டு .இ.எஸ். சங்கர்**
**தவில் சுடர் ஒளி திருப்புன்கூர். எஸ்.சம்பத், தாளம் எஸ்.வாசு குழுவினர்கள்**

**நாகேஸ்வரன் கோவில் ஆஸ்தான வித்வான் R..ராம்சங்கர் நாதஸ்வரம்**
**கருப்பூர் பெட்டி காளியம்மன் கோவில் ஆஸ்தான வித்வான்**
**A. பிரபாகரன் நாதஸ்வரம் குழுவினர்கள்**

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான நாதஸ்வர வித்வான்கள்**
**G. ராமமூர்த்தி G. மகேந்திரன் குழுவினர்**

## தேவாரம் மற்றும் வேத பாராயணம்

**தேவார இசைமணி தி. கதிர்வேல் சுப்பிரமணியன் ஓதுவார் மூர்த்திகள் காஞ்சிபுரம்.**

**வேத பாராயணம் ஏற்பாடு ஸ்ரீ J.சந்திரமௌலி**
**ஸ்ரீ சிவார்ப்பணம் ட்ரஸ்ட் அவர்கள் தலைமையில் நடைபெறும்**

**மஹான் ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள் மணிமண்டப மகா கும்பாபிஷேகம், வழூர்**

**சிறப்பு கலை நிகழ்ச்சிகள்**

| தேதி | 8.30-10.45 am | 10.45-12.15 am | 4.30-6.00 pm | 6.00-7.30 pm | 7.30-9.00 pm |
|---|---|---|---|---|---|
| 03.04.22 | புனித நீர் ஊர்வலம் | ஸ்ரீ கதிர்வேல் ஓதுவார், காஞ்சிபுரம் தலைமையில் தேவரா இன்னிசை (12 ஓதுவார்கள்) | யுவகலா பாரதி ஸ்ரீ சி.ஆர்.பார்கவி பரதநாட்டிய கலை நிகழ்ச்சி | மயிலாடுதுறை திரு. R.சந்தோஷ் மற்றும் குழுவினரின் வயலின் இன்னிசை | கடலூர் ஸ்ரீ கோபி பாகவதர் நாம சங்கீர்த்தனம் தலைப்பு: ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் |
| 04.04.22 | 8.30-9.15 am<br>பெங்களூர் பேபி ஹாசினி கிரிஷ் பேபி சஹானா கிரிஷ் பக்தி பாடல்கள்<br>----------------------------<br>9.15-10.45 am<br>ஸ்ரீ தினகர சர்மா ஸ்ரீ கணேஷ் சர்மா திவ்ய நாம அபிநயம் | மதுரை திரு விஜயகணேஷ் வயலின் உமையாள்புரம் மாலி மிருதங்கம் | சென்னை குமாரி சக்தி முரளிதரனின் கர்நாடக சங்கீதா இன்னிசை | வில்லிவாக்கம் R.S. ஜகந்நாதன் வில்லிவாக்கம் S. ரகுராமன K.R. ஸ்ரீவத்ஸ் குழுவினர் வழங்கும் வாத்திய சங்கீத சங்கமம் | ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்வான் ஸ்ரீ திரு U.ராஜேஷ் மற்றும் குழுவினரின் மேண்டலின் இன்னிசை |
| 05.04.22 | 8.30-9.15 am<br>குமாரி மஹதி வெங்கட் பக்தி சொற்பொழிவு<br>----------------------------------------<br>9.15-10.45 am<br>பெங்களூர் குமாரி ஸ்மிர்தி ஸ்ரீதர் மற்றும் திவ்யா தர்மராஜன் பரதநாட்டிய கலை நிகழ்ச்சி டாக்டர் ரக்ஷா கார்த்திக் மாணவிகள் | டாக்டர் கணேஷ் மற்றும் குழுவினரின் பக்தி இன்னிசை | விருது வழங்கும் விழா | திருமதி சாந்தி சுரேஷ் மற்றும் குழுவினரின் இன்னிசை கச்சேரி | கலைமாமணி ஸ்ரீ லால்குடி G.J.R. கிருஷ்ணன் குழுவினரின் வயலின் இன்னிசை |
| 06.04.22 | மகா கும்பாபிஷேகம் | | திருவீதி உலா | திருவீதி உலா | சிறப்பு வீதியுலா காட்சி |

**கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு: ஸ்ரீ மஹாலக்ஷ்மி சாரிடபுள் டிரஸ்ட், சென்னை**

**பங்குனி மாதம் 23 ம் தேதி புதன்கிழமை (06-04-2022)** கும்பாபிஷேகம் நிறைவுற்றதும் ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள் உற்சவமூர்த்தியை ரிஷப வாகனத்தில் எழுந்தருளசெய்து திருவீதி உலா, வெகு விமர்சையாக நடைபெறும்.

# சேஷாத்ரி ஸ்வாமிகள் இன்றும் அருளும் அற்புதங்கள்

எண்ணிலடங்கா பக்தர்களுக்குக் கனவில் தோன்றி, சூக்ஷ்ம ரூபத்தில் மஹான் அருள்புரிந்து வருகிறார். ஒரு 6 மாதம் முன்பு, ஒரு பக்தனின் கனவில் மஹான் தோன்றி, காஞ்சிபுரம், வழூர், திருவண்ணாமலையை ஒரே நாளில் தரிசனம் செய், உனது தீராத வியாதிகளைத் தீர்த்து வைக்கிறேன் என்று மஹான் அருள, அவரும் அப்படிச் செய்ய, மருத்துவ உலகத்திற்கே பிடி படாமல் இருந்த அவர் உடம்பு குணமாகியது. இந்த நிகழ்வைப் பலபேரிடம் பகிர்ந்திட, அனைவரும் இதே மாதிரி ஒரே நாளில் தரிசனம் செய்து பயனடைந்து வருகின்றனர்.




அதுமட்டுமின்றி திருப்பணிக்காக இடத்தை வாங்கிய போது அதிசயத்தக்க வகையில் மஹான் குடும்பத்தாலும், தாயார் மரகதம்மாளும் வழிபட்ட துளசி மாடம் காணப்பட்டது. அதை திருப்பணி குழுவினர் பத்ரமாக எடுத்து வைத்து இந்த மணிமண்டபத்தில் எழுந்தருளப்பண்ணியுள்ளனர். பக்தர்களுக்கு எந்த குறை இருந்தாலும் மஹானையும் துளசிமாடத்தையும் 12 முறை வலம்வந்தால் அவர்களின் குறைகள் தீரும்.

**பஸ் ரூட் - Bus Route:**

மகானின் மணிமண்டபம் அமைந்துள்ள வழூர் கிராமமானது மேல்மருவத்தூரில் இருந்து வந்தவாசி செல்லும் பஸ் மார்க்கத்தில் மருதாடு என்ற இடத்தில் இறங்கினால் அங்கிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

மேலும் இது காஞ்சிபுரத்தில் இருந்து 40 கிலோ மீட்டர் தூரமும் மேல்மருவத்தூரில் இருந்து 25 கிலோமீட்டர் தூரமும் மற்றும் வந்தவாசியில் இருந்து 12 கிலோ மீட்டர் மற்றும் தென்னாங்கூரில் இருந்து 8 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது.

**For more info contact**

**SRI SESHADRI SWAMIGAL (VAZHUR) TRUST**

Flat No.2. “Kamalini” No.31/16 CIT Colony I Main Road, Mylapore, Chennai – 600004

**Srimathi. Mahalakshmi Subramanian, Chennai – 9840053289, vcsmani@yahoo.com**

**Dr.P.Sridhar, Vandavasi – 9443543397, drsridharan09@gmail.com**

**Mr.S.Ravi, Chartered Accountant, Chennai – 9840110827, sravica@hotmail.com**
**Mr.Veeramani, USA - +1(603)546-5502, rveermani@gmail.com**
**Mr.Pattabiraman, Chennai – 9962019172, seshadriswamigalvazhur@gmail.com Udayasthamana Pooja**
**Invitation Designed by Mrs.Sudha Sridhar, Bengaluru**

**Bank Details for Donations**

**Name: SRI SESHADRI SWAMIGAL (VAZHUR) TRUST**

**Bank: State Bank of India, Vandavasi Branch**

**Current Account No: 34411917439, , IFSC Code:SBIN0001018**

## தங்கள் வருகையை அன்புடன் எதிர்நோக்குகின்றோம்